ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1905/16 - 2015 මාර්තු මස 11 වැනි බදාදා - 2015.03.11

*1905/16 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 11 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கையில் நீர்மூலங்களையும், அவற்றின் நீரேந்து பிரதேசங்களையும் ஒதுக்கங்களையும் பாதுகாப்பதற்கும், பேணுவதற்குமான தேசிய கொள்கை**

*2014, திசெம்பர் மாதம் 22 ஆந் திகதிய 1894/3 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட "இலங்கையில் நீர்மூலங்களையும், அவற்றின் நீரேந்து பிரதேசங்களையும், ஒதுக்கங்களையும் பாதுகாப்பதற்கும், பேணுவதற்குமான தேசிய கொள்கை"யில் வெளியிடப்படுகின்ற திகதியாக 2015, சனவரி மாதம் 07 ஆந் திகதி எனப் பிரசுரிக்கப்பட்டிருப்பது, அதற்குப் பதிலாக 2014, திசெம்பர் மாதம் 22 ஆந் திகதி எனத் திருத்தப்படுகின்றது என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.*

கலாநிதி ஜ. எச். கே. மகாநாம,
செயலாளர்,
காணி அமைச்சு.

காணி அமைச்சு,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, இராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2015, மாச்சு 09.

3-774

---

**பௌத்த விஹாரைகள், தேவாலயங்கள் கட்டளைச் சட்டம்**

**3 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

*1931 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, பௌத்த விஹாரைகள், தேவாலயங்கள் (திருத்தப்பட்ட) கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் புத்தசாசன அமைச்சர் கரு ஜயசூரிய ஆகிய நான், 1614/30 ஆம் இலக்கம் மற்றும் 2009, ஒகத்து 14 ஆந் திகதி, வெள்ளிக்கிழமை அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட ருஹுணு மஹா கதரகம தேவாலயம், குறித்த கட்டளைச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (இ. ஈ.) பகுதிகளின் விதிமுறைகளுக்கமைய விடுவிப்பதாக வழங்கப்பட்ட கட்டளை மற்றும் 1801/39 ஆம் இலக்கம் மற்றும் 2013, மாச்சு 15 ஆந் திகதி, வெள்ளிக்கிழமை அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட ருஹுணு மஹா கதரகம தேவாலயம், குறித்த கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் மேலதிக விதிமுறையின் (ஆ) பிரிவிற் குறிக்கப்படும் "எனினும் அவ்வாறு நீடிக்கப்படும் காலத்தின் மொத்தம் இரண்டு வருடங்களுக்கு மேற்படலாகாது" என்ற விதியிலிருந்து விடுவிக்கப்படுவதாக வழங்கப்பட்ட கட்டளையை 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 17 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இத்தால் இரத்துச் செய்கின்றேன்.*

கரு ஜயசூரிய,
புத்தசாசன அமைச்சர்.

கொழும்பு,
2015, மாச்சு 10.

3-735

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.